Tamilmanam – International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI
SJIF Imapact Factor 3.5 · Monthly
Vol. 12, No. 06 (2026) p376–386 TIRJTS-2026-0022
DOI: 10.63300/tmi12n062026.17

RESEARCH ARTICLE

“கவிஞர் வைரமுத்துவின் 'கருவாச்சி காவியம்' நாவலில் பண்பாட்டுப் பெண்ணியக் கூறுகள்”

Cultural Feminist Perspectives in Vairamuthu's Karuvachi Kaviyam

அமல்ராஜ் டோ.யா.[1,*], முனைவர் லலிதபாலா பூ[2]

[1] முனைவர் பட்ட ஆய்வாளர் (தமிழ்),சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழகம்,தஞ்சாவூர்.

[2] உதவிப் பேராசிரியர்(தமிழ்),சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழகம்,தஞ்சாவூர்.

***Corresponding author:** அமல்ராஜ் டோ.யா., dyamalraj90@gmail.com

ORCID iD: அமல்ராஜ் டோ.யா. https://orcid.org/0009-0004-4308-0642

ARTICLE INFO

Article history
Received: 6 October 2026
Revised: 10 October 2026
Accepted: 15 October 2026

Article ID
TIRJTS-2026-0022

Peer review
Double-blind peer review

Keywords
Cultural Feminism
Cultural Conflicts
Sacralization and Oppression
Patriarchy
Society
Tradition

ABSTRACT

This research paper critically examines the elements of cultural feminism and the socio-cultural crises imposed on women by a patriarchal society, focusing on Poet Vairamuthu’s novel Karuvachi Kaviyam. The study highlights key socio-cultural pressures, such as deploying women as passive tools to avenge a forty-year family feud, forcing them into marriage without their consent, and imposing societal values on them through cultural rituals like the thali. Furthermore, through the primary events of the novel, this study uncovers the subtle deceit of "sacralization and oppression," wherein women are compared to Mother Earth and religious philosophies to prevent them from rebelling against the injustices inflicted upon them.

How to cite this article: டோ.யா., அ., & பூ, மு. ல. (2026). “கவிஞர் வைரமுத்துவின் 'கருவாச்சி காவியம்' நாவலில் பண்பாட்டுப் பெண்ணியக் கூறுகள்”. *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, *12*(06), 376–386. https://doi.org/10.63300/tmi12n062026.17
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

முன்னுரை (Introduction)

பெண்ணியம் என்னும் தத்துவக் கோட்பாடு உலகளாவிய நிலையில் பெண்ணுக்கான சம உரிமை, சம வாய்ப்பு மற்றும் சமூக நீதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவானதாகும். இருப்பினும், அது செயல்படும் நிலவியல், இனம், மொழி மற்றும் சமூகச் சூழல்களுக்கு ஏற்பப் பல்வேறு பரிமாணங்களையும் சிக்கல்களையும்

எதிர்கொள்கிறது. அவற்றுள் மிகவும் குறிப்பிடத்தக்கதும் ஆழமானதுமானது 'பண்பாட்டுச் சிக்கல்' ஆகும்.

பண்பாடு என்னும் சொல்லின் உருவாக்கக் கட்டமைப்பு குறித்து மொழியியல் அறிஞர் முனைவர் பொற்கோ குறிப்பிடுகையில், **"பண்பாடு என்பது கூட்டுச்சொல்; இது 'பண்' என்ற சொல்லும் 'பாடு' என்ற சொல்லும் இணைந்து 'பண்பாடு' என நின்றது. கட்டுப்படு, முரண்படு என்னும் சொற்கள் கட்டுப்பாடு, முரண்பாடு என்று ஆக்கம் பெற்றது போல 'பண்படு' என்பது 'பண்பாடு' ஆயிற்று" (தமிழ்ப் பண்பாடு – முனைவர் த. அருள் பத்மராசன், பக். 7)**என்று விளக்குவார். இதன்படி, 'பண்பாடு' என்பது ஒரு சமூகத்தின் தொடர்ச்சியான செயல்பாடுகளில் உள்ள பிழைகளை நீக்கி, அவற்றைச் செப்பனிட்டுத் 'திருந்தச் செய்தல்' என்னும் நேர்மறைப் பொருளைச் சுட்டுகிறது.

ஆனால், பெண்ணியப் பார்வையில் அணுகும்போது, பெண்கள் தலைமுறை தலைமுறையாகச் சந்திக்கும் ஒடுக்குமுறைகளில் இருந்து பாடம் கற்றுத் தங்களை விடுதலை செய்து கொள்வதற்குப் பண்பாடு முழுமையாகத் துணைநிற்கிறதா என்றால், அது கேள்விக்குரியதாகவே உள்ளது. இதற்கு முதன்மைக் காரணம், ஆணாதிக்கச் சமூகம் தனக்குச் சாதகமாகக் கட்டமைத்து வைத்துள்ள 'பண்பாட்டு மரபுகளே' ஆகும். தொன்றுதொட்டுப் பின்பற்றப்பட்டு வரும் இத்தகைய மரபுசார் நடைமுறைகள், சில இடங்களில் பெண்ணுரிமைக்கும் பெண்ணின் சுய விருப்புக்கும் எதிரான தடைகளாகவும் சிக்கல்களாகவும் மாறுகின்றன. இக்கோட்பாட்டுப் பின்னணியில், வைரமுத்துவின் 'கருவாச்சி காவியம்' நாவலில் பண்பாட்டுக் கட்டமைப்பு எவ்வாறு பெண்ணியத்திற்கு எதிரான சிக்கலாக அமைந்துள்ளது என்பதை விரிவாக ஆராய்வதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.

பண்பாட்டுச் சிக்கல்கள் (Cultural Conflicts)

'கருவாச்சி காவியம்' நாவலின் மைய அச்சு பழிவாங்கும் உணர்வை அடிப்படையாகக் கொண்டது. நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த குடும்பப் பகையைத் தீர்ப்பதற்காக, எதிரிக் குடும்பத்துப் பெண்ணான கருவாச்சியை மணந்து, பத்தே நாட்களில் அத்திருமண பந்தத்தை முறித்துத் தொடர் வன்முறைக்கு உட்படுத்துவதே கதையின் முதன்மைப் போக்காகும். இங்கு ஆணின் தவறுக்குப் பெண்ணைப் பழிவாங்கும் கருவியாகத் தேர்ந்தெடுப்பதிலிருந்தே, சமூகத்தின் பண்பாட்டுச் சிக்கலை இனம் காண முடிகிறது. பாதிக்கப்பட்ட தரப்பில் பெண் இருப்பதால், எதிர்த்தரப்பிலும் பெண்ணையே காயப்படுத்த வேண்டும் என்னும் மனநிலை, சமூகம் கட்டமைத்துள்ள பண்பாட்டு மேலாதிக்கத்திலிருந்தே தோன்றுகிறது எனலாம்.

பொதுவாகக் குடும்பக் கட்டமைப்பில் நிகழும் திருமண முறையை விவரிக்கும் போது,**"ஆண் – பெண் கல்யாண விஷயத்தில் அதாவது, புருஷன் – மனைவி என்ற**

வாழ்க்கையானது நமது நாட்டில் உள்ள கொடுமையைப்போல் வேறு எந்த நாட்டிலும் கிடையவே கிடையாது என்று சொல்லலாம். நமது கல்யாணத்தத்துவம் எல்லாம் சுருக்கமாய்ப் பார்த்தால், பெண்களை ஆண்கள் அடிமையாகக் கொள்வது என்பதைத் தவிர, வேறு ஒன்றுமே அதில் இல்லை." (தந்தை பெரியார், பெண் ஏன் அடிமையானாள்?, பக்கம் 19)என்று பெரியார் குறிப்பிடுவார்.

இந்நாவலில் கருவாச்சியின் திருமணம் என்பது ஒரு இயல்பான உறவுமுறையாக அமையாமல், திட்டமிடப்பட்ட பழிவாங்கும் நடவடிக்கையாகவே நிகழ்கிறது. சடையத் தேவர் நயவஞ்சகமாகப் பெண் கேட்கும்போது,கருவாச்சியின் தாய் பெரிய மூக்கி தன் மனத்திற்குள் கணக்குப்போடுகிறாளே தவிர, கருவாச்சியின் இசைவைப் பெறவோ அவளிடம் கலந்துரையாடவோ இல்லை.இங்கு "மகள் நான் சொல்லும் மாப்பிள்ளைக்குக் கண்ணை மூடிக்கொண்டு தலையை நீட்டுவாள்" என்ற மரபுசார் பெற்றோரின் மனநிலையும், பெண்ணின் சுயவிருப்பத்தைப் புறக்கணிக்கும் வழக்கமும் பண்பாட்டுச் சிக்கலின் வெளிப்பாடே ஆகும்.

சடையத் தேவரும் அவரது மகன் கட்டையனும் சேர்ந்து கருவாச்சியைப் பல வழிகளில் கொடுமைப்படுத்துகின்றனர். "யாரோ செய்த தவறுக்கு நிரபராதியான பெண்ணை ஏன் பழிவாங்க வேண்டும்?" என்ற கேள்வி அவர்களுக்கு எழுவதில்லை. பெண் என்பவள் அமைதி, அடக்கம், பெருமை போன்ற 'குடும்பப் பண்பாட்டு அடையாளங்களைச்' சுமப்பவளாகவும், குரலற்றவளாகவும் (Voiceless), வலிமையற்றவளாகவும் சமூகத்தால் வடிவமைக்கப்பட்டுள்ளதால், அவளைப் பழிவாங்கும் எளிய கருவியாகத் தேர்ந்தெடுக்கின்றனர். இதே அநீதி ஒரு ஆணுக்கு இழைக்கப்பட்டிருந்தால் அச்சமூகமும் அந்த ஆணும் அமைதி காத்திருக்க மாட்டார்கள். எனவே, பெண்ணின் மீது சுமத்தப்பட்டுள்ள பண்பாட்டு அடையாளங்களே அவளது ஒடுக்குமுறைக்குக் காரணமாக அமைவதை இப்பாத்திரம் தெளிவாக உணர்த்துகிறது.

கருவாச்சி சந்திக்கும் வாழ்வியல் சிக்கல்களும் பண்பாட்டு நெருக்கடிகளும்

திருமணமான பத்தே நாட்களில் பழிவாங்கும் நோக்கில் கருவாச்சிக்கு இழைக்கப்படும் வன்முறைகளும், அவளது உடல் மற்றும் மன ரீதியான சிதைவுகளும் நாவலில் மிகக் கொடூரமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. திருமணமான இரண்டாம் நாள் கட்டையன் கருவாச்சியைக் கரிச்சாம்பாறைக்கு அழைத்துச் சென்று கொதிக்கும் பாறையில் தள்ளுகிறான். இதனால் அவளது முதுகுத்தோல் வெந்து போகிறது. மூன்றாம் நாள், ஏர் உழும் இடத்திற்குக் கஞ்சி தூக்கிச் சென்றவளைக் கிணற்றுச் சால் கயிற்றைப் பிடிக்க வைத்து வன்முறைக்கு உட்படுத்துகிறான். இது குறித்து நாவலாசிரியர்,**"...தூக்குவாளியப் புடுங்கித் தூர எறிஞ்சுட்டு அவள உச்சுனாப்புல தூக்கி இடுப்புல இடுக்கிக்கிட்டு கமலையில தொங்கிக்கிட்டிருந்த**

வால்கயித்தப் புடிச்சுக்கிட்டே சரசரசரவென்று கெணத்துக்குள்ள எறங்கி சால்ல நிக்கிறான்..." (கவிஞர் வைரமுத்து, கருவாச்சி காவியம், பக்கம் 27) என்று விவரிப்பார். புதுக் கயிற்றின் முள்ளுகள் குத்தியதால் கருவாச்சியின் கைகள் இரத்தம் சொட்டச் சொட்டப் புண்படுகின்றன. தன் குடும்பப் பகையைத் தீர்த்துவிட்டதாகக் கட்டையனும் அவனது தந்தை சடையத்தேவரும் இதில் மகிழ்ச்சியடைகின்றனர்.இக்கொடுமைகளுக்கு ஆளாகித் தாய் வீடு திரும்பும் கருவாச்சியின் மேனியிலிருந்து தாய் பெரியமூக்கி ஆடையை அகற்றிப் பார்த்தபோது, வேலிமுள் பாய்ந்து இரத்தம் உறைந்திருந்த அவளது உடல்நிலையைக் கண்டு கதறுகிறாள். உடல் ரீதியான சிதைவோடு நின்றுவிடாமல், சொர்ணக்கிளியின் கொடூரமான வரலாற்றைக் கட்டையன் கூறும்போது கருவாச்சி மனப்பிறழ்வு அடைந்து பைத்தியம் பிடித்தவள் போல் ஆகிறாள். ஊர்க் கோடாங்கி அவளுக்குப் பேய் ஓட்டுவதும், அதனைத் தொடர்ந்து பத்தே நாட்களில் பஞ்சாயத்தைக் கூட்டி இருவரையும் பிரித்து வைப்பதும் சமூகத்தின் வன்கட்டமைப்பை வெளிப்படுத்துகிறது.

பஞ்சாயத்தில் கட்டையனிடம் தாலிச் சரட்டைக் கொடுத்துவிடும்படி கேட்டபோது, கருவாச்சி அதனை மறுத்துத் தன் சீற்றத்தை வெளிப்படுத்துகிறாள். நாவலாசிரியர் இந்நிகழ்வின் வழியாக,**"இல்ல இந்த ஜென்மத்துல நீ எனக்குப் புருஷனுமில்ல; இந்த பூமியில பிறந்த எந்த ஆம்பளையும் எனக்கு புருஷனாகப் போறதும் இல்ல" (கவிஞர் வைரமுத்து, கருவாச்சி காவியம், பக்கங்கள் 51-52)**என்றும், **"தாலிச் சரடுன்னா வெறும் கயிறா? ஒரு ஆம்பளைக்கும் பொம்பளைக்கும் மத்தியில ஊடாடுற உயிரு"** என்றும் கருவாச்சியைக் பேச வைக்கிறார். கணவனால் கைவிடப்பட்ட நிலையிலும் தாலியைக் கழட்ட மறுப்பதும், மறுமணத்திற்கு உடன்படாமல் இருப்பதும் பெண்ணின் தனிப்பட்ட விருப்பம் சார்ந்தது அன்று. மாறாக, திருமண உறவு முறியும்போதும் பெண் மீது சமூகம் திணித்துள்ள 'சமூக மதிப்பீட்டையும்' பண்பாட்டுச் சடங்குகளையும் காப்பாற்ற வேண்டிய கட்டாயத்திற்குப் பெண் உட்படுத்தப்படுவதையே இக்கதைப்போக்குப் பண்பாட்டுச் சிக்கலாக வெளிப்படுத்துகிறது.

பெண்ணைப் புனிதப்படுத்தி ஒடுக்குதல்

ஆணாதிக்கச் சமூகம் பெண்ணை ஒடுக்குவதற்கு நேரடியான வன்முறைகளைக் கையாள்வதுடன், மிகவும் நுட்பமானதொரு அணுகுமுறையாகப் **'புனிதப்படுத்தி ஒடுக்குதல்'** என்னும் உத்தியைக் கையாளுகிறது. மேம்போக்காகப் பார்க்கும்போது பெண்ணைப் புகழ்வது போன்றும் பெருமைப்படுத்துவது போன்றும் தோன்றும் இந்நடைமுறை, உண்மையில் அவளது உரிமைகளைக் குரலற்றதாக்கும் ஒடுக்குமுறையாகும். எடுத்துக்காட்டாக, *"பூமித்தாய் பொறுமை காப்பது போல பெண்*

பொறுமை காப்பாள்" என்னும் வழக்காறு, தனக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் இழிவுகளையும் பெண் எந்தவித எதிர்ப்பும் இன்றித் தாங்கிக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவதன் மூலம் அவளை மௌனிக்கச் செய்கிறது.

இதே தன்மையை 'கருவாச்சி காவியம்' நாவலில் வரும் சாமியார் - கருவாச்சி சந்திப்பு உரையாடல் மிகத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. தேசாந்திரியாக அலைந்து ஞானத்தைத் தேடும் சாமியார், படிக்காத பாமரப் பெண்ணான கருவாச்சியின் வாழ்வியலில் தன் கேள்விக்கான விடையைக் காண விரும்புகிறார். சாமியார் எழுப்பும் கேள்விகளுக்குக் கருவாச்சி அளிக்கும் பதில்கள் யாவும் அவளது அமைதியையும் பொறுமையையும் போற்றுகின்றன. உதாரணமாக, சாமியார் தன்னைத் துன்புறுத்தியவர்களை ஏன் தண்டிக்கவில்லை என்று கேட்கும்போது,**"சாமி! 'பல்லுக்குப் பல்லு, கண்ணுக்குக் கண்ணு' என்று போனால் உலகமே பொட்டு வாயாகவும் குருடாகவும்தான் போகும். யாராவது ஒருவர் நிறுத்தியாகணுமில்ல அதனாலதான் நான் நிறுத்திட்டேன்" (கவிஞர் வைரமுத்து, கருவாச்சி காவியம், பக். 320-321)**என்று கருவாச்சி பதிலளிக்கிறாள். மேலும், "அடிக்கும் உளியை விட அடி தாங்கும் பாறையே சிறந்தது" எனக் கூறிக்கொண்டு, தனக்கு எதிரான அநீதிகளை எதிர்த்துக்கேள்வி எழுப்பாமல் தன்னைத் தானே பாறையாக உருவகப்படுத்திக் கொள்கிறாள்.

சாமியார் இந்நிகழ்வைக் கண்டு திருக்குர்ஆன் மற்றும் மத்தேயு நற்செய்தி போன்ற சமய நூல்களின் தத்துவங்களோடு ஒப்பிட்டு வியந்து, கருவாச்சியைக் "கர்மயோகி", "ஞானகுலமாதரசி" என்று போற்றுகிறார். ஆனால், இத்தகைய தத்துவ உரையாடல்களும், பெண்ணைப் புனிதப்படுத்தும் போற்றல்களும் ஆணாதிக்கச் சமூகத்தின் மற்றொரு வடிவமே ஆகும். இது குறித்து இலதா குறிப்பிடும்போது,**"ஒரு ஆணாதிக்கச் சமூகத்தில், பெரும்பாலான மதங்களே பெண் என்பவள் ஆணிற்காகத்தான் படைக்கப்பட்டிருக்கிறாள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கும் சமூகத்தில், ஒரு பெண் பொருளாக மட்டுமே பார்க்கப்படுவதில் ஆச்சர்யப்பட எதுவுமே இல்லை." (லதா, கழிவறை இருக்கை, பக்கம் 41)**என்பார்.இதற்கேற்ப, பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு இயல்பாக வர வேண்டிய கோபமும் எதிர்ப்பும் பெண்ணுக்கு இருக்கக் கூடாது என்பதையும், அனைத்தையும் பொறுத்துக் கொள்வதாலேயே அவள் உயர்ந்தவளாகிறாள் என்னும் 'சமூக மதிப்பீட்டை' நிலைநிறுத்துவதையும் நோக்கமாகக் கொண்டே இந்நிகழ்வு கட்டமைக்கப்பட்டுள்ளது. எனவே, எந்தச் சூழ்நிலையிலும் பெண் புரட்சியோ கலகமோ விளைவித்துவிடக் கூடாது என்பதற்காகப் பெண்ணைப் புகழ்வது போலப் போற்றிக் கட்டுப்படுத்தி ஒடுக்கும் பண்பாட்டு வஞ்சகத்தையே இப்பாத்திரப் படைப்பு வெளிப்படுத்துகிறது.

முடிவுரை (Conclusion)

கருவாச்சிக்குக் கட்டையன் தொடர்ச்சியாகப் பல இன்னல்களைத் தந்த போதிலும், அவனது மரணத் தருவாயில் நோயுற்றுத் தளர்ந்திருக்கும் அவனது கடந்த காலக் கொடுமைகளை மறந்து, அவனைத் தன் இல்லத்திற்கு அழைத்துச் சென்று கவனித்துக்கொள்வதாக நாவலை நாவலாசிரியர் நிறைவு செய்கிறார். இத்தகைய முடிவுப் பகுதி பெண்ணியக் கோட்பாட்டு நோக்கில் அணுகும்போது கடுமையான விமர்சனத்திற்குரியதாகிறது. "கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்" என்னும் மரபுசார் பழமொழிக்கு ஏற்ப, பெண் எவ்வளவுதான் கொடுமைகளுக்கு ஆளானாலும் கணவனைப் பேணிக்காப்பவளாக இருக்க வேண்டும் என்ற ஆணாதிக்கச் சமூகத்தின் நெடுநாளைய விருப்பத்தையே இத்தீர்ப்பு நிறைவேற்றுகிறது.இதனை மெய்ப்பிக்கும் விதமாக நாவலாசிரியர் தமது பாயிரத்தில், **"கருவாச்சியின் வாழ்வியலோடு கலந்து வரும் கலாச்சார தீர்ப்புகளும் நம்பிக்கைகளும் காலத்தின் குரலேயன்றி கலைப்படைப்பின் கருதுகோள் அல்ல"** என்று குறிப்பிடுவதன் மூலம் **கலாச்சார தீர்ப்புகளுக்கும் நம்பிக்கைகளுக்கும்**உட்பட்டே ஆசிரியர் நாவலை அணுகியுள்ளார் என்பது புலனாகிறது. இவ்வாறாக கருவாச்சி காவியம் நாவலில் பல இடங்களில் பண்பாட்டுப் பெண்ணியக் கூறுகள் அமைந்துள்ளன.

References

அருள் பத்மராசன், த., தமிழ்ப் பண்பாடு, மலர் புக்ஸ்.

பஞ்சாங்கம், க., இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர்.

பெரியார், பெண் ஏன் அடிமையானாள், நன்செய் பிரசுரம், திருத்துறைப்பூண்டி.

லதா, கழிவறை இருக்கை, நோராப் இம்பிரிண்ட்ஸ் வெளியீடு, சென்னை.

வைரமுத்து, கருவாச்சி காவியம், சூர்யா லிட்ரேச்சர் (பி) லிமிடெட், சென்னை.